## முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## OS.No -150/2022

Date: 27.10.2025 DW. 1 ( K.நாகராஜ்)

**வாதி தரப்பு குறுக்குவிசாரணை:**

எனக்கு எழுதப்படிக்க தெரியும் என்றால் சரிதான். வாதி மாரிமுத்து என்பவர் மதகுபட்டியில் உள்ள பள்ளியில் ஆசிரியராக வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். அடமானத்திற்கான பணம் ஒரு செட்டியாரிடமிருந்து வாங்கி தருவதாக சொன்னதால் அடமான பத்திரத்தில் நான் கையொப்பம் போட்டேன். ஆனால் அடமான பத்திரத்தில் ரூ.6,00,000/- பெற்றுக்கொண்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த செட்டியாரிடமிருந்து அடமானத்திற்கான பணம் வாங்கித்தருவதாக சொன்னார் என்றால் ஒக்கூர் வெள்ளையசெட்டியாரிடம் வாங்கி தருவதாக சொன்னார். எனது மறுப்புரையிலும், சாட்சிய பிரமாண வாக்கு மூலத்திலும் மேற்படி ஒக்கூர் வெள்ளையசெட்டியாரின் பெயர் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் மறுப்புரையில் நான் சொல்லியுள்ளேன். சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. என் மறுப்புரையில் வெள்ளையசெட்டியார் பள்ளியில் பணிபுரிவதாக தான் சொல்லியுள்ளேன் என்றும் அவரிடமிருந்து எனக்கு பணம் பெற்றுத்தருவதாக சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் மறுப்புரையில் ஒக்கூர் வெள்ளையசெட்டியார் பள்ளியில் பணிபுரிவதாக நான் சொன்னது போல் அவர் பணிபுரியவில்லை என்றும் மதகுபட்டியில் உள்ள பள்ளியில் தான் வாதி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல. வெள்ளையசெட்டியாரிடம் பணம் வாங்கி தருவதற்காக வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அடமான பத்திரத்தில் கண்டுள்ள சொத்திற்கான வாடகையை வாதிதான் பெற்றுக்கொண்டார் என்பதற்கான எதாவது ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் உள்ள வீட்டை வாதியின் அனுபவத்தில் விட்டதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருப்பத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் என் மனைவி என் மீது புகார் கொடுத்தது எந்த தேதி, எந்த மாதம், எந்த வருடம் என்றால் நவம்பர் 2018ல் கொடுத்தார் தேதி ஞாபகமில்லை. மேற்படி புகாருக்கான ஆவணம் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.10.27 16:06:45 +0530

ஆவணத்தை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். திருப்பத்தூர் காவல்நிலையத்திற்கு வாதியும், சாட்சி சிவசாமி என்பவரும் வந்தார்கள் என்று நான் சொல்வது பொய் என்றும் அவர்கள் எப்போதும் காவல்நிலையத்திற்கு வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சிவகங்கை காவல்நிலையத்தில் நான் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் 2018 ஏப்ரல் மாதம் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு தபால் மூலம் புகார் அனுப்பினேன். மேற்படி புகார் சம்மந்தமாக மானாமதுரை காவல்நிலையத்தில் எப்போது விசாரித்தார்கள் என்றால் மேற்படி புகாருக்கு பிறகு சுமார் 15 நாட்கள் கழித்து விசாரித்தார்கள் தேதி, மாதம் ஞாபகமில்லை. மேற்படி புகார் அனுப்பியதற்கான ரசீது, தபால் சம்மந்தப்பட்ட மற்ற ஆவணங்கள் ஆகியவற்றை நான் என்னிடம் வைத்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் 2018ம் வருடம் புகார் எதுவும் அனுப்பவில்லை என்றும் புகார் சம்மந்தமாக எந்தவித விசாரணையும் நடைபெறவில்லை என்றும் புகார் அனுப்பியதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அடமான பத்திரம் எழுதிக்கொடுத்த தேதியிலிருந்து இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை வா.சா.ஆ.1 அடமான பத்திரத்தை ரத்து செய்வதற்காக நீதிமன்றம் மூலம் எதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 வரையுள்ள ஆவணங்களில் ஈடுகடன் பத்திரத்திற்கான அசல் பணத்தை செலுத்தக்கோரி தான் கேட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 அறிவிப்பிற்கும் நான் பதிலறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். நான் சொல்வது போல் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 வரையுள்ள அறிவிப்பிற்கு எந்தவித பதிலறிவிப்பும் அனுப்பவில்லை என்றும் பதில் அனுப்பியுள்ளதாக தற்போது நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 27.09.2021ம் தேதி வாதி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.2 அறிவிப்பை வா.சா.1 ஈடுகடன் பத்திரத்தில் உள்ள தொகையை கேட்டுத்தான் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். வா.சா.2 அறிவிப்பிற்கு நான் பதில் அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல்

எனது குடும்ப செலவிற்காக வாதியிடமிருந்து ரூ.6,00,000/- பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1 ஈடுகடன் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றும் தற்போது இந்த வழக்கிற்காக பணம் பெற்றுக்கொள்ளாமல் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாக்குமூலத்தில் கூறியுள்ளபடி வழக்கு சொத்தில் உள்ள வீடுகள் வாதி வசம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி அவரது சொந்த பணத்தை நான் என் தேவைக்காக கொடுத்து வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டது என்றும் கடன் வாங்கி தருவதாக சொன்னதன் பேரில் பணம் பெறாமலேயே நான் கையொப்பம் போட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.10.27 16:06:52 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**